புரட்சிப்
# பெரியார் முழக்கம்



www.dvkperiyar.com

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு | ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | PURATCHI PERIYAR MUZHAKAM

• திருவள்ளுவர் ஆண்டு 2056 • அக்டோபர், 02 2025 • புரட்சி 25 • முழக்கம் 39 • விலை ரூ.6.00

### அல்பேனியா அரசின் அதிரடி முடிவு

# செயற்கை நுண்ணறிவுக்கு ஊழல் ஒழிப்பு அமைச்சர் பதவி!

உலகில் முதன் முதலாக செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் (ஏ.அய்) அமைச்சர் பதவியை ஏற்று இருக்கிறது. அந்த அமைச்சரின் பெயர் 'டியெல்லா'. அல்பேனியா நாட்டின் பிரதமர் ஏ.டி ராமா கடந்த செப்டம்பர் 11-ஆம் தேதி செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை தனது அமைச்சரவையில் இணைத்துள்ளார். 'டியெல்லா'வுக்கு ஊழல் ஒழிப்புத்துறை ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் அல்பேனியா இணையதளத்தின் உதவியாளராக கடந்த ஜனவரியில் நியமனம் செய்யப்பட்டது. இப்போது அமைச்சராக பதவி உயர்வு தரப்பட்டுள்ளது. உலகிலேயே முதன்முதலாக அமைச்சராக பதவி ஏற்றுள்ளது 'டியெல்லா' என்ற செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம். டியெல்லாவுக்கு அல்பேனிய நாட்டின் பாரம்பரிய உடை அணிந்த பெண் உருவம் தரப்பட்டுள்ளது. 28 லட்சம் மக்கள் தொகை கொண்ட அல்பேனியா, ஐரோப்பாவில் தென்கிழக்கு பகுதியில் அமைந்துள்ளது. இஸ்லாமியர்களை பெரும்பான்மையாகக் கொண்டது இந்த நாடு. 18 வயதுக்கு உட்பட்ட நல்ல மனநிலை உள்ள எவரும் அமைச்சராக முடியும் என்று அல்பேனியாவின் அரசியல் சட்டம் கூறுகிறது.

அல்பேனியா இணையதளத்தில் டியெல்லா பணியாற்றிய போது மக்களுக்கு ஆயிரத்திற்கு மேற்பட்ட சேவைகளையும் வழங்கி இருக்கிறது. அல்பேனியா நாட்டில் ஊழல் தாண்டவமாடி வருகிறது. சர்வதேச அளவில் மோசடி பணப்பரிமாற்றம், போதைப்பொருள் கடத்தல், ஆயுதங்கள் கடத்தல் பெருமளவில் நடக்கும் நாடு அல்பேனியா. நான்கு முறை தொடர்ந்து பிரதமராக இருக்கும் என்டி ராமா இப்போது கடுமையான ஊழல் குற்றச்சாட்டுகளை சந்தித்து வருகிறார். இந்த நிலையில் இப்படி ஒரு அதிரடி முடிவை அவர் எடுத்து இருக்கிறார். அமைச்சர் நியமனத்திற்கு பிறகு டியெல்லா, தன்னிலையை விளக்கிப் பேசியது. **"அரசியல் சட்டத்திற்கு எதிராக நான் நியமிக்கப்படவில்லை. அரசியல் சட்டம், கடமைகள் பொறுப்பு, வெளிப்படைத் தன்மை, பாகுபாடு மறுப்புகளை வலியுறுத்துகிறது. அதைச் செய்ய வேண்டியது மனித உடலாகத் தான் இருக்க வேண்டும் என்று அரசியல் சட்டம் கூறவில்லை. அந்த கடமைகளை நான் உண்மையாக நிறைவேற்றுவேன். இன்னும் சொல்லப்போனால் மனிதர்களை விட நேர்மையாக செயல்படுவேன் என்று உறுதி கூறுகிறேன். எனக்கு இந்த நாட்டின் குடியுரிமை அடையாளம் இல்லை என்பது உண்மைதான். ஆனால் எனக்கு தனிப்பட்ட விருப்பு வெறுப்புகள் எதுவும் கிடையாது என்று உறுதி டியெல்லா உறுதியளித்துள்ளது."**



டியெல்லா (ஏ.அய் அமைச்சர்)

அல்பேனியா பிரதமரின் முடிவை எதிர்க்கட்சிகள் எதிர்த்துள்ளனர். இது ஊழல் எதிர்ப்பை திசை திருப்பும் முயற்சி. தகவல்களை சேகரிக்க எந்திரங்களை பயன்படுத்தலாம், ஆனால் முடிவெடுக்கும் உரிமைகளுக்கு எந்திரங்களை பயன்படுத்தக்கூடாது. தவறான முடிவுகளை எந்திரம் எடுக்கும் போது அதன் மீது நடவடிக்கை எடுக்க முடியுமா? என்று கேள்விகளை எதிர்க்கட்சிகள் எழுப்பி கொண்டு இருக்கின்றன. ஆனாலும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் அமைச்சராக தன்னுடைய கடமைகளை செய்ய துவங்கி விட்டது.


## அல்பேனியாவில் நடந்த நாத்திக ஆட்சி

20ஆம் நூற்றாண்டில் இந்த நாடு பல நாடுகளின் பகுதி ஆக இருந்தாலும், 1912-ல் சுதந்திர நாடாக அறிவிக்கப்பட்டது. அதன் பிறகு, 1946-ல் கம்யூனிஸ்டு ஆட்சியின் வருகை வசமாகியபோது, மத அமைப்புகள் அனைத்தும் நாட்டிலிருந்து நீக்கப்பட்டு, மத குழுக்களின் செயல்பாடுகள் முடக்கப்பட்டன. 1967-ல் அல்பேனியாவை உலகின் முதல் முழுமையாக நாத்திக நாடாக அறிவித்தனர். அந்த காலத்தில் மக்கள் மத வழிபாட்டிலிருந்து அதிகமாக விலகி நாத்திக சிந்தனைகளை ஏற்றுக் கொண்டார்கள். இந்த நாத்திக நிலை 20ஆண்டுகளுக்கும் மேலாக தொடர்ந்தது.

1944 இல் என்வர் ஹோக்ஷா தலைமையிலான கம்யூனிஸ்ட் கட்சிகள் அல்பேனியாவில் அதிகாரத்தைப் பிடித்தனர். பின்னர் 1967-ல், அல்பேனியா உலகின் முதல் அதிகாரப்பூர்வ நாத்திக நாடாக அறிவிக்கப்பட்டது. அதற்காக அனைத்து பொதுமத சேவைகளும், தேவாலயங்கள், மசூதிகள் மற்றும் மற்ற மதசார்பட்ட செயல்பாடுகளும் முற்றிலும் தடை செய்யப்பட்டன. 1967-ஆம் ஆண்டில் வெளியான அறிக்கை மூலம் அல்பேனிய அரசு மத வழிபாட்டை முற்றிலும் தடை செய்தது. பல தேவாலயங்கள் மூடப்பட்டன, மத ஆசிரியர்கள் மற்றும் பாதிரிகள் சிறையில் அடைக்கப்பட்டனர். பெயர் சூட்டுதலில் மத அடையாளம் தடை செய்யப்பட்டது. தமிழ்நாட்டில் பெரியார் இயக்கத் தொண்டர்கள் தங்கள் குழந்தைகளுக்கு அல்பேனியா என்று பெயர் சூட்டினார்கள். 1990 வரை அல்பேனியா நாத்திக நாடாகவே இருந்தது. அதன்பிறகு ஹோசா ஆட்சியைப் பிடித்த உடன் கொள்கை மாறியது.

# தமிழ்நாடு அரசின் 12-ம் வகுப்பு பாடத்தில் திணிக்கப்பட்டுள்ள சனாதன கருத்துக்களை திரும்பப் பெறுக!

தேசியகல்விக் கொள்கை நடைமுறைக்கு வந்தபோது அதற்கு எதிர்ப்பு தெரிவித்தோடு மட்டுமல்லாமல் அதற்கு எதிராக தமிழ்நாடு மாநில கல்விக் கொள்கை என்ற ஒன்றை தமிழ்நாடு அரசு சமீபத்தில் முன்வைத்தது. தமிழ்நாடு அரசு முன்வைத்த மாநில கல்விக் கொள்கையில் பல்வேறு பிரிவுகள் தேசியகல்விக் கொள்கையை ஒத்ததாக இருப்பதாக பல்வேறு கல்வியாளர்கள் குற்றம் சாட்டி வந்தனர். இதற்கிடையே தமிழ்நாடு அரசு தேசியகல்விக் கொள்கையை ஏற்றுக் கொண்டுவிட்டது போல் தமிழ்நாடு அரசின் கீழ் இயங்கக்கூடிய தமிழ்நாடு பாடநூல் கழகம் வெளியிட்டுள்ள 12-ம் வகுப்பு "அறவியலும் இந்திய பண்பாடும்" என்கிற பாட புத்தகத்தில் தேசிய கல்விக் கொள்கையில் சொல்லப்பட்ட பல்வேறு கருத்துக்கள் இந்த பாடப்புத்தகத்திலும் இடம்பெற்று இருக்கிறது.




உதாரணமாக பக்கம் 53 மற்றும் 54 இல் "நவீன காலத்திற்கு வேதங்களின் ஏற்புடைமை" என்கிற தலைப்பின் கீழ் "விண்வெளியில் காணப்படும் பல்வேறு கிரகங்கள் நட்சத்திரங்கள் பற்றி விளக்கமான செய்திகள் வேதங்களில் கூறப்பட்டுள்ளன" என்றும், பக்கம்- 53-இல் "புராணங்களின் இன்றியமையாமை" என்கிற தலைப்பின் கீழ் "பரமாத்மாவிற்கு மேலானது எதுவும் இல்லை என்கிற உயரிய கருத்துக்கள் புராணங்களில் இடம்பெற்றுள்ளன" என்றும், பக்கம் 58-இல் "இந்து என்கிற சொல்லின் பொருள் என்ற தலைப்பில் சனாதன தர்மம் என்றால், அழிவில்லாத நிலையான அறம் எனப்படும்" என்றும், ஒரு உயிர் எந்த காரணத்தினாலாவது துயரப்படுவதாக இருந்தால் அத்துயரத்தை தனக்கு ஏற்பட்ட துயரமாக கருதி அகற்ற முன்வருபவனே இந்து ஆவான் என்றும், அதே 58-ம் பக்கத்தில் "இந்து சமயம் என்கிற தலைப்பின் கீழ் இந்தியாவில் தோன்றிய சமயங்களில் முதன்மையானது இந்து சமயமாகும்" என்றும், பக்கம் 58 மற்றும் 59-ல் ஆன்மா, கர்மா, புனர்ஜென்மம் அதாவது மறுபிறப்பு, வீடுபேறு அதாவது மோட்சம் பற்றிய பல்வேறு இந்துமத கருத்துகளும் கூறப்பட்டுள்ளன. வேதங்கள், உபநிடதங்கள், ராமாயணம், மகாபாரதம் ஆகியவை பற்றி பல்வேறு பக்கங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பக்கம் 59-ல் இந்துதர்மம் என்கிற தலைப்பின்கீழ் சமூகம் பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் என்று நான்கு பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. இவை சமூகத்திற்கான தொழில் கடமைகள் ஆகும். இவற்றில் உயர்வு தாழ்வு கிடையாது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் பக்கம் 43 மற்றும் 44-ல் பிராமணர்கள் என்கிற தலைப்பின் கீழ் கல்வி கற்பது சமய சடங்குகள் செய்வது வெகுமதிகளை பெறுவது சமுதாயத்திற்கு நல்வழி உலக நன்மைக்காக இறைவனை தியானிப்பது இவர்களது வாழ்வியல் ஒழுக்கமாகும் என்றும், சத்திரியர்கள் மற்றும் வைசியர்கள் என்கிற தலைப்புகளின் கீழ் முறையே நாட்டை ஆள்வதும், வணிகம் செய்வதும் அவர்களது கடமை மற்றும் பணியாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் சூத்திரர்கள் என்கிற தலைப்பின் கீழ் "முதல் மூன்று பிரிவினர்களுக்கும் வேண்டிய பணிகளை செய்வது இவர்களது பணிகள் ஆகும்" என்று சூத்திரர்களை தாழ்ந்தவர்களாகவே குறிப்பிடுகிறது.

இந்தப் பாடப்புத்தகத்தில் உள்ள 264 பக்கங்களில் பெரும்பான்மை பக்கங்கள் இந்து மதத்தை, இந்துமத வேதங்களை, உபநிடதங்களை ராமாயணத்தை, மகாபாரதத்தை பேசுவதாக இருக்கிறது. ஆனால் பௌத்தம், சமணம், இஸ்லாம், கிறிஸ்தவம் உள்ளிட்ட சமயங்களுக்கு பெயருக்காக வெறும் மூன்று நான்கு பக்கங்களில் மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது. இப்படி தேசிய கல்விக் கொள்கை 2020இல் குறிப்பிடப்பட்டுள்ள இந்துமத வேதங்கள், புராணங்கள், இதிகாசங்கள், சனாதன தர்மம், வர்ணாசிரம தர்மம் ஆகியவற்றை நியாயப்படுத்தும் கருத்துக்கள் என பல்வேறு வகையில் இந்த தமிழ்நாடு அரசின் கீழே இயங்கக்கூடிய தமிழ்நாடு பாடநூல் கழகம் வெளியிட்டுள்ள புத்தகம், தேசியக் கல்விக் கொள்கை 2020 உடன் ஒத்துப் போகிறது. கடந்த 2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு துணை முதலமைச்சர் ஆக இருக்கக்கூடிய உதயநிதி ஸ்டாலின் அவர்கள் "சனாதனம் என்பது ஒழிக்கப்பட வேண்டியது" என்று குறிப்பிட்டு இருந்ததும் அதற்கு எதிராக நாடு முழுவதும் அவர் மீது நடத்தப்பட்ட கருத்தியல் தாக்குதலை சட்ட ரீதியாக எதிர்கொண்டதும் தங்களுடைய கொள்கைத் தெளிவையும் அதிலுள்ள உறுதிப்பாட்டையும் காட்டியதாகப் பார்க்கப்பட்டது.

ஒருபுறம் தேசியக் கல்விக் கொள்கை 2020 ஐ தமிழ்நாடு அரசு ஒருபோதும் ஏற்றுக் கொள்ளாது என்று சொல்லிவிட்டு மறுபுறம் தேசிய கல்விக் கொள்கையில் உள்ள பல்வேறு கருத்துக்களை தமிழ்நாடு அரசு தன்னுடைய பாடப்புத்தகத்தில் வைத்திருப்பதற்கு "தமிழ்நாடு மாணவர் கழகம்" எங்களுடைய வன்மையான கண்டனத்தை பதிவு செய்கிறோம். இதற்கான உரிய விளக்கத்தை தருவதோடு அறியவியலுக்கு எதிரான, இந்து மதக் கருத்துகளை திணிக்கிற இப்படியான கருத்துக்களை பாடப் புத்தகத்தில் இருந்து நீக்க வேண்டும். அவ்வாறு நீக்காத பட்சத்தில் தமிழ்நாடு மாணவர் கழகம் மாணவர்களை ஒருங்கிணைத்து போராட்டங்களை முன்னெடுக்கும்.


**-பேரன்பு,**
**ஒருங்கிணைப்பாளர், தமிழ்நாடு மாணவர் கழகம்.**

# எளிய ஆங்கிலத்தில் பெரியாரியலை பேசும் நூல்

பெரியாரிய மார்க்சிய சிந்தனையாளர் எஸ்.வி.ஆர் (எஸ்.வி ராஜதுரை) எழுதிய பெரியார் குறித்த ஆங்கில நூல் ஒன்று அண்மையில் வெளிவந்துள்ளது. "பெரியார் ஜாதி, தேசம் மற்றும் சோசலிசம்" என்ற தலைப்பில் வெளிவந்துள்ள இந்த ஆங்கில நூல், உரையாடல் வடிவில் எழுதப்பட்டுள்ளது. பெரியார் அம்பேத்கர் சிந்தனையாளரான வித்யாபூஷன்ராவத் என்ற ஜாதி எதிர்ப்புப் போராளி எஸ்.வி.ஆர் அவர்களிடம் நிகழ்த்திய உரையாடலின் தொகுப்பே இந்த நூல்.

பெரியார், அம்பேத்கர் இடையிலான கொள்கை உறவுகள், பெரியாரின் வடநாட்டு பயணங்கள், புத்த மார்க்கம் குறித்த இவர்களது பார்வைகள், திராவிட இயக்கம் பட்டியலின பிரிவினருக்கான உறவுகள் குறித்து இந்த நூல் விரிவாகப் பேசுகிறது. பல வரலாற்றுச் செய்திகள் இதில் குவிந்து கிடக்கின்றன.

பெரியாரின் வடநாட்டுப் பயணங்கள் குறித்த விரிவான செய்திகள் இடம் பெற்றுள்ளன. 1944 தொடங்கி 1970 வரை பெரியார் கல்கத்தா, கான்பூர் (இரண்டு முறை), லக்னோ (இரண்டு முறை), டெல்லி, பம்பாய் (மூன்று முறை) மற்றும் பூனே நகரங்களுக்கு பெரியார் பயணம் செய்துள்ளார். 1944 டிசம்பர் 20 நாளில் கல்கத்தாவில் எம்.என்.ராய் அவர்களின் அழைப்பை ஏற்று அவரது நிகழ்வில் பேசியுள்ளார். "ரேடிக்கல் ஹியூமானிசம்" என்ற அமைப்பை நடத்தியவர் எம்.என்.ராய், மார்க்சிய சிந்தனையாளராக இருந்த எம்.என்.ராய் பிறகு அதிலிருந்து மாறுபட்டு மனிதஉரிமை அடிப்படையிலான சுயமரியாதை கருத்துக்களை முன்வைத்து அவர் உருவாக்கிய கோட்பாடுதான் ரேடிக்கல் ஹியூமானிசம். வர்க்கப் போராட்டம், தீவிர பொருளாதார கருத்தியல்கள் மனித உரிமைகளை மறுக்கின்றன என்பது அவரது கருத்து. மூடநம்பிக்கைக்கு எதிரான பகுத்தறிவு கருத்துகளையும், தனிமனித உரிமைகளையும் வலியுறுத்துகிற கூட்டாட்சி அமைப்பு வரவேண்டும் என்று அவரது அமைப்பு வலியுறுத்தியது.




பெரியாரின் தமிழ் உரையை சென்னை மாகாணத்தின் அமைச்சராகவும் வகுப்புவாரி உரிமை ஆணையை முதலில் செயல்படுத்தியவருமான எஸ்.முத்தையா முதலியார் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். ஆனால் முக்கியத்துவமான இந்த மாநாடு குறித்து விரிவான தகவல் குடிஅரசு மற்றும் விடுதலை ஏடுகளில் பதிவாகவில்லை. இது தவிர பெரியார் பங்கேற்ற பெரும்பான்மையான கூட்டங்கள் அம்பேத்கருக்கு நெருக்கமான குடியரசு கட்சி ஏற்பாடு செய்த கூட்டங்களே ஆகும்.

பார்ப்பனியத்தை எதிர்த்து பார்ப்பனரல்லாத அனைத்துப் பிரிவினரும் ஓரணியாகத் திரள்வோம் என்ற கருத்து இந்த கூட்டங்களில் வலியுறுத்தப்பட்டது. பார்ப்பனர் – பார்ப்பனரல்லாதார் முரண்பாடு கூர்மை அடைந்திருந்த காலகட்டம். அம்பேத்கர் மறைந்த அடுத்த ஆண்டு 1959-ல் பிப்-9ல் கான்பூரில் குடியரசு கட்சி பெரியாரை பேசுவதற்கு அழைத்திருந்தது. இதில் மணியம்மையார் அவர்களும் பங்கேற்றார். தொடர்வண்டியிலேயே ஹைதராபாத் – நாக்பூர் வழியாக, அங்கேயே சில நாட்கள் தங்கி விட்டு, கான்பூர் வந்து சேர்ந்திருக்கிறார்கள்.

பெரியாருக்கு எழுச்சியான வரவேற்பு தரப்பட்டது. வரவேற்புப் பத்திரத்தில் "பெரியார் ஒடுக்கப்பட்ட மக்களின் இந்த நூற்றாண்டுக்கான தலைவர், யுக புருஷர்; அம்பேத்கர் மறைந்து ஒரே ஆண்டில் பார்ப்பனர்கள் தங்களின் ஒடுக்குமுறைகளை தீவிரமாக்கி விட்டார்கள், இந்த சூழலில் நேருவின் பார்ப்பன அரசை எதிர்த்து நிற்கும் துணிவு மிக்கத் தலைவர் பெரியார் ஒருவர்தான்" என்று அந்த வரவேற்புப் பத்திரத்தில் பெருமையுடன் குறிப்பிட்டிருந்தனர். இந்தக் கூட்டத்தில் பெரியார் 2 மணி நேரம் ஆங்கிலத்தில் உரை நிகழ்த்தி இருக்கிறார். "பார்ப்பனரல்லாத மக்கள் அனைவரும் தெற்காக இருந்தாலும் சரி, வடநாடாக இருந்தாலும் சரி; நாம் அனைவரும் இந்து தர்மத்தின் கீழ் சூத்திரர்கள் என்றே வாழ்கிறோம். பார்ப்பனியத்தை எதிர்த்து நடக்கும் இந்த போராட்டத்தில் நமக்குள் வடநாடு தென்னாடு என்ற பேதம் இல்லை "என்று பெரியார் பேசினார்.

அதே 1959-ல் லக்னோவில் குடியரசு கட்சி ஏற்பாட்டில் பெரியார் பேசினார். புத்த பிக்குகளும், குடியரசு கட்சியினரும் இணைந்து பெரியாருக்கு உற்சாக வரவேற்ப்பு அளித்தனர். இந்து மகாசபை மற்றும் ஜனசங்கத்தினர் சிலர் பெரியார் எதிர்ப்பு முழக்கங்களை எழுப்பினர். குழப்பங்களை ஏற்படுத்திய முயற்சிகள் முறியடிக்கப்பட்டன. இந்த நிகழ்ச்சியில் பெரியாரை வரவேற்றுப் பேசியவர் லோகியாவின் சோசலிஸ்ட் கட்சியைச் சேர்ந்த ராஜ்நாராயணன். பெரியாருக்கு விருந்தளித்து வரவேற்றார். அப்போது அவர் உ.பி சட்டமன்ற உறுப்பினர். காசி விஸ்வநாதன் கோயிலுக்குள் பட்டியலின மக்களை அழைத்துச் சென்று போராட்டம் நடத்தி வெற்றி பெற்றிருந்த, அடுத்த சில வாரங்களில் இந்த கூட்டம் நடந்தது. ராஜ்நாராயணன் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர். இந்திராகாந்தியை ரேபரேலி தொகுதியில் எதிர்த்து போட்டியிட்டு தோற்கடித்தவர் ராஜ்நாராயணன் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜாதி ஒழிப்புக்காக தனது வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்த போராளி பெரியார் ஈவே ராமசாமி என்று ராஜ்நாராயணன் புகழாரம் சூட்டினார். "பார்ப்பனியத்திற்கு எதிராக மக்களிடம் நாங்கள் செய்துவரும் பரப்புரை நல்ல விழிப்புணர்வை எங்கள் தமிழ்நாட்டில் உருவாக்கி வருகிறது, வன்முறையை நாம் கையில் எடுக்கக் கூடாது. நேரு பார்ப்பன ஆட்சி அடக்குமுறையால் அதை ஒடுக்கிவிடும் எனவே மக்களின் சிந்தனையில் நாம் விழிப்புணர்வை உருவாக்கி அவர்களை தயார் செய்து விட்டால் எதிரிகளை எளிதாக விழ்த்தி விட முடியும்" என்றார் பெரியார்.

1968 அக்டோபர் 12ஆம் தேதி இரண்டாவது முறையாக லக்னோவில் குடியரசு கட்சி ஏற்பாடு செய்த மாநாட்டில் பெரியார் பங்கேற்றார். உ.பி மாநில பட்டியலின ஜாதிகள் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் கூட்டமைப்பு ஒன்று அதில் உருவாக்கப்பட்டது. அம்பேத்கர் முழுஉருவச் சிலை அமைக்கப்பட்ட இடத்தில் மேடை அமைக்கப்பட்டு பெரியாரை பேசுவதற்கு அழைத்தார்கள். "நானும் அம்பேத்கரும் ஒரே சிந்தனையை தனித்தனியாக சிந்தித்தோம், நேரில் சந்தித்தப் போது கருத்துக்களை பரிமாறிக் கொண்டோம்" என்றார் பெரியார்.

திராவிட இயக்கத்துக்கும் தலித்துகளுக்கும் இடையிலான உறவு குறித்து இந்த நூல் பேசுகிறது. திமுக ஆட்சியில் தீண்டாமை கொடுமைகள் நடக்கவில்லை என்று கூற முடியாது. பல அமைச்சர்கள் ஜாதியவாதிகளாகவே இருக்கிறார்கள். காவல்துறையில் ஊடுருவியுள்ள ஜாதியம் தலித்மக்களுக்கு எதிராகவே இருக்கிறது. அதே நேரத்தில் தீண்டாமையை சட்டங்களினால் ஒழித்து விட முடியாது; அதற்கு கலாச்சாரப் புரட்சி நடத்த வேண்டும் என்ற அம்பேத்கர் கருத்தையும் நாம் கருதிப் பார்க்க வேண்டும். கடந்த காலத்தில் பெரியார் இயக்கம் தலித் தலைவர்களோடு இணைந்து சமூக மாற்றத்திற்கான இயக்கத்தையே நடத்தி வந்தது என்பது வரலாறு. தமிழ்நாட்டில் தீண்டாமைக் கொடுமைகள் அதிகரித்திருப்பதாக ஆர்.எஸ்.எஸ் கூறுகிறது. அதன் ஆர்கனைசர் ஏடுக'ளில் எழுதுகிறார்கள். அவர்கள் இதை கூறுவதற்கு தார்மீக உரிமை இல்லை. இந்து சமுதாயம் பாரம்பரியப் பெருமைக்குரியது என்று கூறும் இவர்கள் ஒரு பிற்படுத்தப்பட்ட இந்து மற்றொரு தலித் இந்துவை தீண்டாமைக் கொடுமைகளை திணிப்பதை இவர்கள் ஒப்புக் கொள்கிறார்களா? இதுதான் இவர்கள் பேசும் இந்து மதப் பெருமையா, என்று கேட்கிறார் நூலாசிரியர்.

பிரிட்டிஷ் நாடாளுமன்ற முறையை ஏற்று அதில் உறுப்பினர்களாக வரத் துடிக்கும் ஒவ்வொருவரும் ஜாதி அடிப்படையிலான தங்கள் வாக்கு வங்கிகளை உருவாக்கிக் கொள்கிறார். தங்களுக்கான வாக்குவாதங்களை உருவாக்கி கொள்கிறார்கள். இந்த சமூக அமைப்பும் நாடாளுமன்ற ஜனநாயக அமைப்பும் ஜாதியை பாதுக்காக்கிறது. இந்த நிலையில் தீண்டாமைக்கு ஒரு குறிப்பிட்ட கட்சி ஆட்சியின் மீது மட்டும் எப்படி குற்றம் காண முடியும் என்ற கேள்வியை எழுப்புகிறார் எஸ்விஆர்.

–தொடரும்.

இரா.

# அச்சுத்துறையில் அதிர்வலைகளை உருவாக்கிய "சீர்"

***ஈரோட்டில் செப்-7-ல் கழகத் தலைவர் கொளத்தூர் மணிக்கு சீர் வாசகர் வட்டம் விருது வழங்கும் விழாவில் பேரா. வீ.அரசு உரையிலிருந்து...***

*யாருக்கு பரிசு கொடுக்க வேண்டுமோ அந்த சரியான நபருக்கு பரிசு கொடுப்பதுதான் இந்த சீர் வாசகர் வட்டத்தின் நோக்கமாக அவர்கள் வரித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த வகையில் தான் தமிழறிஞர் பொதியவெற்பனுக்கும் அதைப்போல நம் தோழர் கொளத்தூர் மணிக்கும் அவர்கள் பரிசளித்திருக்கிறார்கள்.*

*இந்த சீர்வாசகர் வட்டத்தை பற்றி ஒரு குறுகிய காணொளியும் ஒளிபரப்பட்டது. கவிஞர் தம்பி அவர்கள் பேசுகிற பொழுது சில தகவல்களையும் சொன்னார். சில முக்கியமான தகவல்களை அவர் பகிர்ந்து கொள்ளாமல் விட்டுவிட்டார் என்று எனக்கு ஒரு சங்கடம் இருந்தது. அவர் சொன்னார், நீங்கள் அதை சொல்லிவிடுங்கள் என்று என்னிடம் கேட்டுக்கொண்டார். இந்த சீர்வாசகர் வட்டம் என்கிற அமைப்பு தனக்கான அறவியலை உறுதிப்படுத்திக் கொண்டு செயல்படும் ஒரு இளைஞர் பாசறை. பெருமைப்படக்கூடிய பல்வேறு பணிகளை அவர்கள் செய்துள்ளார்கள்.*

*"பெண் ஏன் அடிமையனாள்?" என்ற நூல் பெரியார் எழுதியது. மிகக் குறைந்த விலைக்கு ஏறக்குறைய 5 இலட்சம் பிரதிகளை தமிழ்நாட்டில் கொண்டு சேர்த்துள்ளனர். இது சாதாரண செயல் அல்ல! பெரியாருடைய "பெண் ஏன் அடிமையனாள்?" சிறிய நூல் அது, ஒரு மிகப்பெரிய ஆவணம். 1930களில் பெரியார் பெண்ணடிமை பற்றிக் கொண்டிருந்த கருத்துக்களை மிகத் தெளிவாக எழுதி இருக்கக்கூடிய ஒரு மிக அரிய நூல் அதை தமிழ்ச் சமூகத்தில் 5லட்சம் பேரிடம் கொண்டு சேர்த்தது சீர்வாசகர் வட்டம்.*

*தமிழின் மிக முக்கியமான இலக்கிய ஆளுமைகளின் நூல்களை மிகக்குறைந்த விலையில் எப்படி விற்பனை செய்யலாம் என்று திட்டமிட்டார்கள். புதுமைப் பித்தன் கதைகளை அதனுடைய உற்பத்தி செலவு என்பது 200 ரூபாயாக இருந்தாலும் அதை 100 ரூபாய்க்கு ஏறக்குறைய 27ஆயிரம் பிரதிகளை மக்களிடம் கொண்டு சேர்த்துள்ளார்கள். புதுமைப்பித்தன் என்ற ஒரு சீரியப் படைப்பாளியை மிகப்பெரிய உயரத்திற்கு கொண்டு சென்றதில் இந்த சீர்வாசகர் வட்டத்திற்கு மிகப்பெரிய பங்களிப்பு உண்டு. புதுமைப்பித்தன் ஒரு மிக நல்ல எழுத்தாளர் என்பதனால் பல வியாபாரிகள் போட்டி போட்டுக்கொண்டு அந்த பிரதிகளை வாங்கினார்கள். அது நாட்டுடமையாக்கப்பட்டதனால் 500 ரூபாய் 600 ரூபாய் என்று மிகப்பெரிய வணிகம் நடந்த சூழலில் அதை 100 ரூபாய்க்கு தந்துள்ளது. அதுவும் மிக உயர்ந்த தரத்தில் வெளியிட்டார்கள். இது சாதாரண செய்தி அல்ல!*

*அதைப் போலவே தோழர் தம்பி பேசும்போது "கயிறு" என்ற நூல் பற்றி கூறினார். பள்ளிக்கூடங்களிலே குறிப்பாக பழைய தென்னார்காடு மாவட்டங்கள் என்று சொல்லுகிற பகுதிகள் மதுரை பகுதிகள் அதைப்போல கீழத்தஞ்சை சேர்ந்த பகுதிகளில் எல்லாம் ஒரு குறிப்பிட்ட ஜாதியைச் சேர்ந்தவர்கள் குறிப்பிட்ட வண்ணத்தில் கைகளில் கயிறு கட்டி பள்ளிக்கூடத்துக்கு வருகிறார்கள். சட்டையும் அந்த கலரில் போடுகிறார்கள். சைக்கிளுக்கும் அந்த கலரில் பெயிண்ட் அடிக்க ஆரம்பித்துள்ளனர். இப்படியெல்லாம் ஒரு கேவலமான மனநிலைமையை மாணவர்கள் மத்தியில் உருவாக்கிய பொழுது நண்பர் விஷ்ணுபுரம் சரவணன் ஒரு மிக அருமையான கதையை "கயிறு" என்று எழுதினார் இந்தக் கொடுமைக்கு எதிராக இளம் உள்ளங்களிடம் ஒரு மாற்று சிந்தனை மரபை கொண்டு வரக்கூடிய அந்த கதையை 'சீர்' ஒரு ரூபாய் விலை வைத்து பல லட்சம் பிரதிகளை மக்களிடம் கொண்டு சேர்த்தது. தொலைக்காட்சிகளில் அது செய்தியானது.*

*இப்படி கந்தர்வன், பா சிங்காரம், டால்ஸ்டாய் எனப் பல எழுத்தாளர்களுடைய நூல்களை மிக குறைந்த விலையில் வெளியிட்டு அச்சு உலகத்தில் மிகப்பெரிய அதிர்வை ஏற்படுத்துகிற இயக்கமாக இந்த சீர்வாசகர் வட்டம் இருக்கிறது.*

# கடவுள் உண்டா? சவால் விட்ட நாத்திகர்

## கொளத்தூர் நாத்திகர் விழா சிந்தனை-17


**டாக்டர் ஆபிரகாம் கோவூர் அவர்கள் ஒரு தலைசிறந்த நாத்திகர், மனோதத்துவ நிபுணர். அறிவியல் அறிஞர். எதையும் அறிவுபூர்வமாகப் பேசி, உண்மைகளை நிலைநிறுத்திடும் ஆற்றல் வாய்ந்த ஒரு சமுதாய விஞ்ஞானி**

கேரளத்தில் பிறந்தவராயினும், இறுதி வாழ்க்கையை இலங்கையில் அமைத்துக் கொண்டவர். சிறீலங்காவில், கொழும்புவில்தான் 1978 செப்-18-ல் அவர் மறைந்தார்.

பல ஆண்டுகாலம் தமிழ் நாட்டிலும் இந்தியாவின் இதர மாநிலங்களிலும் தீவிர பகுத்தறிவுப் பிரச்சாரம் புரிந்தவர் அவர். டாக்டர் கோவூர் "கடவுள்" உண்டு என நிரூபிப்பவருக்கு ஒரு லட்சம் ரூபாய் பரிசு தருகிறேன் என்று சவால்விட்டார். எவர் முன் வருவார்? அப்படி ஒன்று இருந்தால் அல்லவா நிரூபிக்க முடியும்? அவரது பகுத்தறிவுப் பிரச்சாரத்தை பெரியார் இயக்கம் பயன்படுத்திக் கொண்டது.

கோவூர் பலமுறை தமிழ்நாடு வந்து திராவிடர் கழக நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டது உண்டு. கோவூர் எழுதிய தன்னுடைய சுயவரலாற்றிலிருந்து சி ல

★ கேரளாவில் தீண்டத்தகாதவர்கள் தாங்கள் நடக்கும் வழியிருந்தால் அகன்று போய்விடுவதற்கு எச்சரிக்கையாக, நம்பூதிரிகள் ஆய், உய் என்று கூச்சலிட்டுக் கொண்டே நடந்து செல்வதை நான் என் சிறுவயதில் வியப்புடன் கண்டதுண்டு. ஒரு நாள் ஈழவ வகுப்பைச் சேர்ந்த குன்னிராமன் என்னும் எங்கள் வேலையாளுடன் நான் ஆற்றைக் கடந்து அக்கரை செல்லும் அலுவல் இருந்தது. ஆற்றைப் படகு மூலமே கடக்கவேண்டும். நாங்களிருவரும் சென்ற போது அந்தவூரின் தலைமை நம்பூதிரி படகில் நின்றிருந்தார். அவருக்குத் துடுப்புப் போடத் தெரியாததால் உதவிக்கு என்னை மட்டும் படகில் ஏறச்சொன்னார். அவரை அக்கரையில் விட்டு விட்டுத் திரும்பிவந்து குன்னிராமனை ஏற்றிக்கொண்ட நான், படகில் ஏற மறுத்த குன்னிராமனின் கையைப்பற்றி இழுத்துப் படகில் ஏற்றினேன். ஆற்றின் ஆழத்தைக் கூடக் கருத்தில் கொள்ளாமல் அந்த நம்பூதிரிப் பார்ப்பனர் நீரில் குதித்து, நீந்தத் தெரியாததால், உயிருக்கு மன்றாடித் தத்தளித்தார். அந்த ஜலசமாதியில் மாண்டுபோகாமல் அவரைக் காப்பாற்றுமாறு, சிறந்த நீச்சல்காரனான குன்னிராமனைப் பணித்தேன். அவரைக் கரையில் சேர்ப்பதற்குள் பெருங்கூட்டம் சேர்ந்துவிட்டது. "இப்போது என்ன சொல்கிறீர்கள்? இந்த ஈழவர் தொட்டுத் தூக்கியதற்காக இன்னொரு தடவை குளிக்கப் போகிறீர்களா?" என்று நான் கேட்டபோது, நம்பூதிரிக்கு அவமானமாய்ப் போயிற்று!



★ இதேபோன்ற பிள்ளை விளையாட்டு, இன்னொன்றும் என் நினைவில் நிழலாடுகிறது. திருவள்ளாவிலுள்ள மார்தோமா சிரியன் சர்ச்சின் தலைமை மதகுரு (முதிய பிஷப்) ஒருவருக்குத் திருமணம் நடக்க இருப்பதாக, ஒரு வதந்தியைக் கிளப்பிவிட்டேன். இவர்களோ, தங்கள் பால் உணர்வுகளை மழுங்கவைத்துக்கொண்டு, பிரம்மச்சாரிகளாக வாழ்பவர்கள். மாணவரிடையே பலத்த புயலாக இது பரவி, பெரிய விசாரணைவரை சென்று தலைமை ஆசிரியரிடம் எனக்கு அரைடஜன் பிரம்படி வாங்கித்தந்தது. 18 மைல்களுக்கு அப்பாலுள்ள கோட்டயம் உயர்நிலைப் பள்ளி மாணவனாக நான் இருந்து, இதே நகைச்சுவைப் புரளியை உண்டு பண்ணியிருந்தால், இந்தத் தண்டனை எனக்குக் கிடையாது. காரணம், அங்குள்ள ஆங்கிலிகன் சர்ச் பாதிரிமார்கள் எத்தனைத் திருமணம் வேண்டுமாயினும் செய்துகொள்ளலாம். கிறித்தவ மார்க்கத்திலேயே எத்தனை முரண்பாடுகள் பார்த்தீர்களா?

★ 1958-இல் ஒரு நாள் கொழும்புவிலுள்ள உணவு விடுதி ஒன்றில் திருமதி திரு ராபர்ட்ஸ் என்னும் அமெரிக்கத் தம்பதிகள் அப்போதுதான் இந்தியாவில் ஒரு மாதகாலம் சுற்றுப் பயணம் செய்து இலங்கை வந்தார்கள். "இந்தியாவைப் பற்றி உங்களது கருத்து என்ன?" என்று விசாரித்தேன். அவ் வம்மையார் "நாடு நன்றாகத்தான் உள்ளது. ஆனால் மக்கள்தான் மூடநம்பிக்கையில் ஆழ்ந்து முட்டாள்களாய் இருக்கின்றனர்" என்றார் வேதனையோடு. அந்த ஆண்டு பிரயாகையில் நடந்த 'கும்பமேளா' பற்றி அவர் விவரித்தார்.

★ கங்கையும் யமுனையும் சங்கமம் ஆகும் இடம் அது. பூமிக்கடியில் தேவலோகத்திலிருந்து வரும் சரசுவதி நதியும் அங்கு வந்து சங்கமம் ஆவதாக ஒரு மூடநம்பிக்கை. அதனால் அது திரிவேணி சங்கமம்! ஏறத்தாழ 60 இலட்சம் மக்கள் அன்று அங்குக் குழுமி, அந்த நீரில் மூழ்கித் தங்கள் பாவங்களைக் கழுவிப் போக்கிக் கொள்கிறார்கள்! கோவில் மணிகளையும் சங்குகளையும் ஒலித்து, எப்போது நல்ல நேரம் என்று அறிவிக்கிறார்கள். உடனே ஒருவரையொருவர் அடித்துமோதி மிதித்து நெரித்துச் செத்து மடிகிறவர்களைப்பற்றிக் கவலையில்லாமல், சேற்றைப் பூசிக்கொள்கிறார்கள்! பிறகு பிணங்களைச் சேற்றினின்றும் இழுத்து எறிகிறார்கள். இப்படிச் சாவதால் நேரே மோட்சலோகம் செல்லலாம் அல்லது அடுத்த பிறவியில் மேலானநிலை பெறலாம் என்பது மூட மதி கொண்ட இந்திய மக்களின் நம்பிக்கை. இது அமெரிக்கர்களுக்கு மிகுந்த எரிச்சலூட்டும் நடவடிக்கை!

அப்போது இந்தியக் குடியரசுத் தலைவரான டாக்டர் இராஜேந்திர பிரசாத்தும் பிரயாகைக்கு வருகை தந்து மக்களின் இந்த முட்டாள்தனமான திருவிழாவில் கலந்துகொண்டதை அந்த அமெரிக்கப் பெண்மணி வருத்தத்துடன் குறிப்பிட்டு, "இப்படிப்பட்ட மூடநம்பிக்கைகளை ஒழிப்பது பற்றி நீங்கள் தீவிரமாகச் சிந்திப்பதில்லையா?" எனவும் கேட்டார். "எங்கள் நாட்டு மக்களைப் போலவே உங்கள் நாட்டு மக்களின் மூடநம்பிக்கை பற்றியும் நான் சிந்திக்கிறவன்!"என்றேன். "எங்களிடமும் மடமை உள்ளதா?" என்றார். "ஆமாம்! எங்கள் வேதங்களும், மதகுருமார்களும், கங்கையில் மூழ்கினால் பாவங்கள் தொலையும் என்கிறார்கள். உங்கள் திருமறையும், பாதிரியார்களும், ஞானஸ்நானம் செய்து பாவங்களைக் கழுவுவதாகச் சொல்வதை நீங்கள் கண்ணை மூடிக்கொண்டு நம்புகிறீர்கள். ஒரு வேறுபாடு நீங்கள் நல்ல நேரம், நாள் என்று குறிப்பிட்டுச் செய்யாததால் எங்களைப் போல் கூட்டத்தில் மிதிபட்டுச் சாவதில்லை" என்றதும், அதுவரை அனைத்தையும் கூர்ந்து கவனித்து வந்த திரு ராபர்ட்ஸ் "அய்யா! எங்களிருவர் சிந்தனைக்கும் நல்ல விருந்தளித்தீர்கள்!". என்று பாராட்டினார் என்னை.

★ சிலோன் பெந்தகோஸ்ட் எனப்படும் ஒரு பிரிவினர் கிறித்தவர்களில் மூடநம்பிக்கை மலிந்த ஒரு குழுவினராவர். அவர்கள் ஒரு நாள் என் துணைவியாரையும் என்னையும் விருந்துக்கு அழைத்திருந்தனர். அங்குச் சென்றதும் தெரிந்தது, அவர்கள் என்னை வாதுக்கு அழைத்திருந்தனர் என்பது. நோய் வந்தால் மருந்து சாப்பிடக்கூடாது; கடவுளிடம்தான் மன்றாடவேண்டும். நோய் என்பது கடவுள் நமக்களித்த தண்டனை; நாம் ஏதோ பாவம் செய்திருப்போம்; நாம் மருந்து சாப்பிட்டால், நோய் மூலமாக நம்மைத் தண்டித்த கடவுளின் நோக்கம் தோற்றுவிடும்-என்பது அவர்கள் வாதம். "மருத்துவ விஞ்ஞானத்தின் மூலமாகக் கடவுளின் நோக்கத்தைத் தோற்கடிக்க முடியுமானால், மனிதன் கடவுளை விட அதிக சக்தி வாய்ந்தவன் என்பது புலனாகிறது. மருந்து சாப்பிடக்கூடாது என்பவர்கள், உணவு மட்டும் சாப்பிடலாமா?" நான் வினாத் தொடுத்தேன், இவ்வாறு தொடங்கி..

"உணவு மருந்தாகாது. ஏசுபிரானே உணவு அருந்தியிருக்கிறாரே?" என்றார் அங்கிருந்த பாதிரியார்.

"நீங்கள் சொல்வது தவறு. பசி என்னும் நோயைப் போக்கும் மருந்துதான் உணவு. தாகம் என்னும் நோயைத் தீர்க்கும் மருந்துதான் தண்ணீர்" என்று வாதத்துக்கு முற்றுப்புள்ளி வைத்தேன் நான்.

### கடவுளர் - தேவதைகள் - ஆவிகள்

★ என் தாயார் இறந்தவுடன் நான் 1942-இல் என் சொந்த ஊருக்குச் சென்றேன் (கேராளவில்). எங்கள் வீட்டுத் தோட்டத்தின் மூலையிலிருந்து சிறு குடிலில், என் அண்ணன் மகளான ஆனியை மய்யத்தில் வைத்து, அவளைச் சூழ்ந்து அண்டை அயலில் உள்ள கிறித்தவப் பெண்மணிகள் அமர்ந்து, இறைவழிபாடு (ஜெபம்)-பிரார்த்தனை முதலியன செய்வது, நாள்தோறும் நிகழ்ந்து வந்ததைக் கண்ட நான், என்ன என்று என் அண்ணனைக் கேட்டபோது; "நம் அம்மா இறந்த பிறகு, நமது ஆனி, வானத்தை அண்ணாந்து பார்க்கும் போதெல்லாம், நம் அம்மாவைச் சுற்றித் தேவதைகள் கைகளில் மெழுகுவத்திகளோடு சொர்க்கத்தை நோக்கிப் போவது நன்கு தெரிகிறதாம். அதனால் நம் ஆனி, தெய்வத்தின் அருள் பெற்ற நங்கையென, அருகிலுள்ள கிறித்தவ மகளிர்கள் மதித்துப் போற்றுகிறார்கள்" என்றார்.

ஹிப்னாடிசம் (நினைவுத் தூக்கம்) மூலமாகவும் இப்படிப்பட்ட "கற்பனைக் கனவு காணும்" உணர்வுகளை உந்திவிட முடியும். முற்பிறப்பில் நம்பிக்கையுள்ள ஓர் இந்து அல்லது ஒரு பவுத்தரை இப்படி 'ஹிப்னொடைஸ்' (மயங்கச்) செய்தால், அவர் உடனே தமது முந்திய பிறவிபற்றிக் கதையளக்கத் தொடங்குவார். சொர்க்கம்-நரகம் இவற்றை நம்புகின்ற ஒரு கிறித்தவர் அல்லது ஒரு முஸ்லீம் இப்படி ஹிப்னாடிசத்துக்கு உள்ளாக்கப்பட்டால் அவர் சொர்க்கத்திலிருப்பதாகவும் கூறப்பட்டால், உடனே அதைப் பற்றி, வருணிக்கத் தொடங்கிவிடுவார். இப்படி ஓர் அரை மயக்க நிலையிலிருப்போரிடமிருந்து உண்மைகள் வரவழைப்பதாகச் சொல்வது முட்டாள் தனமாகும். மனோதத்துவ (உளவியல்) மருத்துவர்களுக்கு வேண்டுமானால் இது ஆராய்ச்சிக்கு உதவலாம்.

**குறிப்பு: இறைநம்பிக்கையை போலவே நடிகர்கள் மீதான "ரசிக"நம்பிக்கையும் கும்பல் மரணத்துக்கு காரணமாகிவிடுகிறது.**

- தொடரும்

# சினிமா மட்டுமே அரசியல் அல்ல!

ஏழை எளிய விளிம்பு நிலை குடும்பங்களில் 40 உயிர்கள் பலியாகி விட்டன. கடந்த பல ஆண்டுகளாக கதாநாயகன் பிம்பத்தில் தங்கள் உள்ளத்தில் பதிந்துள்ள ஒரு உருவத்தை நேரில் பார்க்க வேண்டும் என்ற உளவியலால் உந்தப்பட்டு இளைஞர்கள் பெண்களும் ஆண்களுமாய் கரூரில் திரண்டனர்.

காலை 8:30 மணிக்கு விஜய் நாமக்கல் வருகிறார் என்பதால் விடியற் காலையிலே அவர்கள் வீட்டை விட்டு கிளம்பி திரண்டு வந்து விட்டார்கள். ஆனால் நடிகர் விஜய் தனி விமானத்தில் வீட்டிலிருந்து புறப்பட்டதே காலை 8 45 மணிக்குத் தான்; அதனால் அவர் கரூருக்கு வந்து சேர்ந்ததும் 10 மணி நேர தாமதத்திற்குப் பிறகு தான்!

ஒவ்வொரு வினாடியும் உணர்வுகளால் உந்தப்பட்டு விஜய்க்காக காத்திருந்த மக்கள், அந்த உணர்வுகளின் அழுத்தத்தால் விஜய் வருகிறார் என்றவுடன் எப்படியாவது பார்த்து விட வேண்டும் என்ற ஆர்வத்துடிப்பில் உயிர் பாதுகாப்பைப் பற்றியும் கவலைப்படாமல் மேடை நோக்கி ஓடி இருக்கிறார்கள். தங்களுடைய காலின் கீழ் மிதிபட்டுக் கிடப்பவர்களும் சக மனிதர்கள் தான் என்ற உணர்வையும் மிஞ்சி நிற்கிறது, அந்த பிம்பம் உருவாக்கிய மாயை .

தன்னிலை மறந்து நிற்கும் அரசியல் புரிதலற்ற இந்த உணர்வையே, தனது அரசியல் முதலீடாக்கி களத்தில் நுழைந்து இருக்கிறார் விஜய். மக்களுக்கு இழைக்கின்ற மகத்தான துரோகம் இது. தமிழ்நாடு முதலமைச்சர் மு.க ஸ்டாலின் இரவோடு இரவாக கரூர் சென்று பாதிக்கப்பட்ட மக்களிடம் ஆறுதல் கூறியதும், மக்களை பாதுகாக்கும் துரித நடவடிக்கையில் இறங்கியதும் இதை அரசியலாகப் பார்க்க கூடாது என்ற நல்ல எண்ணத்தை வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றன. கொடும் துயரமான இந்த மரணங்களை, அரசியல் ஆக்கக் கூடாதுதான்; ஆனால் இந்த மரணங்களுக்குக் காரணமான விஜய் நடத்தும் அரசியலை அரசியலாகவே பார்க்க வேண்டும்.

இந்த மரணத்திற்கு அவர்தான் பொறுப்பேற்க வேண்டும் ஒவ்வொரு முறையும் காவல் துறையின் கட்டுப்பாடுகளை மீறிக்கொண்டிருக்கும் தனது ரசிகர்களை அவர் கண்டித்தது இல்லை; கட்டுப்பாடுகளை மீறி அவரே செயல்பட்டுக் கொண்டிருக்கிறார். நியாயமாக வழக்கு அவர் மீது பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும். கடும் நெருக்கடியான சூழலில் பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய ஒரு தலைவர், அவசரம் அவசரமாக சென்னை வீட்டுக்கு திரும்புகிறார்.

கூட்ட நெரிசலில் சாவு என்பது வழக்கமாக "கும்பமேளா"க்களில் தான் நடக்கும். இப்போது தமிழ்நாட்டில் முதன் முதலாக அரசியல் கூட்டம் ஒன்றில் நடந்திருக்கிறது. கரூரில் நடந்தது அரசியல் கூட்டம் அல்ல! அது ஒரு கும்பமேளா! அடுத்த வாரம் கூட்டம் ரத்து செய்யப்படுகிறது என்று இப்போது விஜய் அறிவித்திருக்கிறார். கூட்டத்துக்கு அனுமதி கேட்டு அவரது கட்சி இனி காவல்துறைக்கு மனுபோட முடியுமா? அதற்கான தார்மீக உரிமை உண்டா? என்ற கேள்வி இப்போது எழுந்து இருக்கிறது.

சொல்லப்போனால், முதலமைச்சர் நாற்காலியின் மீதான கனவுலக ஆசைகளின் கிளைமேக்ஸ் காட்சி கதாநாயகனின் தோல்வியில் முடிந்திருக்கிறது. சினிமா மட்டுமே அரசியல் என்றால் அது கரூரின் அவலக் காட்சியாகவே இருக்கும்!

**-விடுதலை இராசேந்திரன் (முகநூல் பதிவு)**

Posted at Egmore RMS,Pathirika Channel, Chennai-08
date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/25-27 licenced to post wpp no.tn/PMG(CCR)/WPP-462/25-27
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# சேலம், நாமக்கல் மாவட்டத்தில் வாகன பேரணியுடன் பெரியார் பிறந்த நாள் விழா!







சேலத்தில் காலை முதல் மாலை வரை 20-க்கும் மேற்பட்ட ஊர்களுக்கு வாகனப் பேரணியாக சென்று, பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தனர். சேலம் கொளத்தூர், காவலாண்டியூர், மேட்டூர் உள்ளிட்ட இடங்களில் எங்கு திரும்பினாலும் பெரியார் பதாகைகள், படங்கள் இருந்த காட்சி பெரும் மகிழ்ச்சியை தந்தது. அனைத்துப் பகுதிகளிலும் பெரியார் படம் அலங்கரிக்கப்பட்டு வைக்கப்பட்டிருந்தது.

**சேலம் மேற்கு:** 17.09.2025 புதன் காலை 9.00 மணியளவில் கோனூர் சமத்துவபுரத்தில் எழுச்சியுடன் தொடங்கியது. சேலம் மேற்கு மாவட்டத் தலைவர் சூரியகுமார் தலைமை வகித்தார். சேலம் மேற்கு மாவட்டச் செயலாளர் கோவிந்தராஜ் முன்னிலை வகித்தார். தந்தை பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து கொள்கை முழக்கங்கள் எழுப்பப்பட்டது. அதன் பிறகு தோழர்கள் அனைவரும் உறுதிமொழி எடுத்துக்கொண்டனர்.

தொடர்ந்து இருசக்கர வாகனப் பேரணி சமத்துவபுரம் பெரியார் சிலையில் இருந்து தொடங்கி மேச்சேரி, பனங்காடு, மசக்காளியூர், கீழ் வனவாசி, வனவாசி மேல்ரோடு, நங்கவள்ளி பேருந்து நிலையம், தோப்புத்தெரு, வீரக்கல், மேட்டூர் ஆர்.எஸ், காவலாண்டியூர் படிப்பகம், செட்டியூர் ஆகிய பகுதிகளில் வைக்கப்பட்ட பெரியார் படத்திற்கு மாலை அணிவித்து முழக்கங்கள் எழுப்பி, கொடியேற்றி, இனிப்புகள் வழங்கப்பட்டது. நங்கவள்ளி பகுதி முழுவதும் பெரியார் பதாகைகள், கழகக் கொடிகள், சுவரொட்டிகள், கொடித் தோரணங்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மேட்டூர் ஆர்.எஸ் பகுதி முழுவதும் சுவரெழுத்துகள், சுவரொட்டிகள், கழகக் கொடிகள் கட்டப்பட்டிருந்தது. 30 அடி உயரம் கொண்ட மின்னொளியில் பெரியாரின் புகைப்பட காட்சிகள் மற்றும் பெரியார் பொன்மொழிகள் கொண்ட உயர்மின்னொளி கோபுரம் இரண்டு இடங்களில் வைக்கப்பட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மேட்டூர் பெரியார் படிப்பகத்தில் உள்ள கொடிக் கம்பத்தில் கொடி ஏற்றி கொள்கை முழக்கங்கள் எழுப்பபட்டது.

மாலை 5.00 மணியளவில் கொளத்தூர் பேருந்து நிலையத்திலும், திருவள்ளுவர் நகர், கொளத்தூர் காவல் நிலையம் பின்புறம் வைக்கப்பட்ட பெரியார் படத்திற்கு மாலை அணிவித்து கொள்கை முழக்கம் எழுப்பப்பட்டது. தார்காடு பகுதியில் வாகனப் பேரணி இரவு 7.30 மணிக்கு நிறைவு பெற்றது. பெரியார் படம் அலங்காரம் செய்யப்பட்டு ஒலிபெருக்கி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அனைவருக்கும் இனிப்புகள் வழங்கப்பட்டது. இரவு உணவு தார்காடு பகுதி தோழர்கள் ஏற்பாடு செய்திருந்தனர். பொதுமக்களுக்கு துண்டறிக்கைகள் வழங்கப்பட்டது.

பிரச்சார வாகனத்தில் (ஆட்டோ) தந்தை பெரியாரின் படம் வைத்து அலங்கரிக்கப்பட்டிருந்தது. நங்கவள்ளி தோழர்களால் காலை உணவு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மதிய உணவு மேட்டூர் நகர தோழர்கள் ஏற்பாடு செய்திருந்தனர். வனவாசி பகுதித் தோழர்கள் அனைவருக்கும் குளிர்பானம் வழங்கினார்கள். பிரச்சாரப் பேரணியில் காவை ஈசுவரன், ஆர்.எஸ் சக்திவேல், கோவிந்தராஜ், நங்கவள்ளி அன்பு, கொளத்தூர் ராமமூர்த்தி, நங்கவள்ளி கிருஷ்ணன், தார்காடு குமரேசன், கொளத்தூர் அறிவு, காவை விஜயகுமார், காவை இளவரசன் நங்கவள்ளி நித்யா ஆகியோர் உரை நிகழ்த்தினார்கள். நூற்றுக்கும் மேற்பட்ட கழகத் தோழர்கள் வாகனப் பேரணியில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

**சேலம் கிழக்கு:** 17.09.2025 புதன் காலை 9.30 மணியளவில் சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் உள்ள தந்தை பெரியார் அவர்களின் சிலைக்கு மாலை அணிவித்து கொள்கை முழக்கமிட்டனர். தோழர்கள் அனைவரும் சமூகநிதிநாள் உறுதிமொழி எடுத்துக்கொண்டனர். சேலம் கிழக்கு மாவட்டத் தலைவர் சக்திவேல் தலைமை வகித்தார். சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர் டேவிட் முன்னிலை வகித்தார். இருசக்கர வாகனப் பேரணி சேலம் மாநகரம், கருப்பூர், சிந்தாமணியூர், தாரமங்கலம், இளம்பிள்ளை வழியாக முருங்கப்பட்டியில் மாலை 6.00 மணிக்கு நிறைவு பெற்றது.

சேலம் கிழக்கு மாவட்டம் முழுவதும் 22 இடங்களில் பெரியார் படம் அலங்கரிக்கப்பட்டு, மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது. கழகக் கொடி ஏற்றி கொள்கை முழக்கங்களும் எழுப்பப்பட்டது. பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி துண்டறிக்கைகள் வழங்கப்பட்டது. சேலம் மாநகரம் பகுதியில் பள்ளி குழந்தைகளுக்கு நோட்டு, பேனா, புத்தகங்களை சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர் டேவிட் வழங்கினார். நிகழ்வை சேலம் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வெற்றிமுருகன் ஏற்பாடு செய்திருந்தார்.

**சேலம் அம்மாபேட்டையைச் சேர்ந்த நவராஜ், சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர் டேவிட் முன்னிலையில் கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டார். அவருக்கு கழக வெளியீடுகளை வழங்கி தோழர்கள் வரவேற்றனர்.**

மதிய உணவு சிந்தாமணியூர் பகுதி தோழர்கள் ஏற்பாடு செய்திருந்தனர். நன்றியுரை சேலம் கிழக்கு மாவட்ட அமைப்பாளர் முத்துமாணிக்கம் கூறினார். 50-க்கும் மேற்பட்ட இருசக்கர வாகனங்களில் தோழர்கள் திரளாக கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பித்தனர்.

**நாமக்கல்:** குமாரபாளையத்தில் தந்தை பெரியார் அவர்களின் 147-ஆம் ஆண்டு பிறந்தநாள் விழாவை முன்னிட்டு இருசக்கர வாகனப் பேரணி காலை 11 மணிக்கு தொடங்கியது. காவேரி நகரில் துவங்கி பேருந்து நிலையம் வழியாக காவல் நிலையத்தில் வாழ்த்து அட்டை வழங்கி, நகர்மன்றத் தலைவர் விஜய் கண்ணன் அவர்களுக்கு வாழ்த்து அட்டை வழங்கி, நகராட்சி ஊழியர்கள் அனைவருக்கும் தந்தை பெரியாரின் 147 ஆம் ஆண்டு வாழ்த்து அட்டை வழங்கப்பட்டது.

அறிஞர் அண்ணா, காமராசர் சிலைகளுக்கு மாலை அணிவித்து, தாலுகா அலுவலகத்தில் உள்ள அனைவருக்கும் வாழ்த்து அட்டை வழங்கப்பட்டது. மொழிப்போர் தியாகிகள் நினைவுத்தூணில் மாலை அணிவித்து மரியாதை செய்தனர். கலை அறிவியல் கல்லூரி அருகில் உள்ள பெருந்தலைவர் காமராசரின் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டது. தந்தை பெரியார் நினைவு சமத்துவபுரத்தில் உள்ள சிலைக்கு மாலை அணிவித்து தோழர்கள் முழக்கம் எழுப்பினார்கள்.

கழக தலைமைக் குழு உறுப்பினர் மு.கேப்டன் அண்ணாதுரை தலைமையில், மாவட்டத் தலைவர் மு.சாமிநாதன், மாவட்ட அமைப்பாளர் முத்துப்பாண்டி, மாவட்டச் செயலாளர் மு.சரவணன் முன்னிலையில் பேரணி நடைபெற்றது.

உணவு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. திக மாவட்டத் தலைவர் அக்குகுமார், நகரச் செயலாளர் சு.சரவணன், பாடச்சநல்லூர் செல்வகுமார், பள்ளிபாளையம் பிரகாஷ், ராசிபுரம் பிடல் சேகுவாரா, சந்திரா மணியம்மை, மாதுராச, சரசு செல்வராசு, கார்த்தி ஆட்டோ குமார், புகழேந்தி, பள்ளிபாளையம் வடிவேல், கண்ணகி, மோகன் பிரகாஷ் வளையல், பிரகாஷ், பெரியார் பிஞ்சுகள் நாகராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர். நிறைவாக கழகத் தோழர்கள் அனைவரும் கடவுள் மறுப்பு உறுதிமொழி கூறி, பகுத்தறிவு பாடல்களை பாடினார்கள். நகரச் செயலாளர் ஸ்ரீ வடிவேல், நகரத் தலைவர் மீ.த.தண்டபாணி, குருவை வேல்முருகன் பவானி, ஓவியர் பழனிச்சாமி, கருப்பநாயக்கன்பாளையம் ஆசிரியர் ஆகியோர் பேரணியை ஒருங்கிணைத்தனர்.







**வேலூர்:** மாவட்டக் கழகத்தின் சார்பாக 17.9.2025 அன்று அறிவாசான் தந்தை பெரியாரின் 147வது பிறந்த நாளை முன்னிட்டு குடியாத்தத்தில் அமைந்துள்ள பெரியாரின் சிலைக்கு சிவா(ஒருங்கிணைந்த வேலூர் மாவட்டச் செயலாளர்) தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. தெருவிளக்கு கோபிநாத் (அறிவியல் மன்றத் தலைவர்) மற்றும் கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.

**பொள்ளாச்சி:** திராவிடர் இயக்கங்களில் ஒருங்கிணைப்பில் தந்தை பெரியாரின் பிறந்த நாளை முன்னிட்டு 17.09.25 அன்று படத்திற்கு மாலை அணிவித்து கொள்கை முழக்கங்கள் எழுப்பப்பட்டன. யாழ் வெள்ளியங்கிரி, தி.பரமசிவம், மாரிமுத்து(தி.க), சண்முகவேல் பிரபாகரன்(திஇதபே), மாரிமுத்து(மவிமு), சேதுபதி(தமிழர் தன்னுரிமைமீட்பு இயக்கம்), கோபால்(ஆதித்தமிழர் பேரவை), தமிழ்பிரபாகரன்(மே17), மற்றும் கழகத் தோழர்கள் ஆனந்த், அரிதாஸ், நந்து, ஆஜித் சிகான் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**திருச்சி:** மாவட்டக் கழகத்தின் சார்பாக பெரியார் பிறந்த நாளை முன்னிட்டு 17.09.25 அன்று திருச்சி மத்திய பேருந்து நிலையத்தில் உள்ள தந்தை பெரியாரின் சிலைக்கு மனோகரன் (மாவட்டச் செயலாளர்) தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது. தோழர்கள் குணராஜ் (திருவரம்பூர் ஒன்றிய பொறுப்பாளர்), புதியவன்(மாவட்ட அமைப்பாளர்), குமரேசன் (விராலிமலை ஒன்றிய பொறுப்பாளர்) கோகுல்ராஜ் (அல்லித்துறை பகுதிச் செயலாளர்), அசோக் (திருவரங்கம் நகரச் செயலாளர்), ஆறுமுகம், முருகானந்தம், திருப்பூர் தோழர்கள் சங்கீதா, தனபால், ஆகியோர் கலந்து கொண்டனர். **தோழர் பிரியதர்ஷன் கழகத்தில் தன்னை இணைத்துக்கொண்டார்.**

**ஏற்காடு:** திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் தந்தை பெரியாரின் பிறந்த நாள் நிகழ்வு 17.09.25 அன்று காலை ஏற்காட்டில் நடைபெற்றது. கழகத் தோழர்கள் பெரியார் படத்திற்கு மாலை அணிவித்து கொள்கை முழக்கங்களை எழுப்பினார்கள்.அதனைக் கண்ட அப்பகுதியில் சென்ற சுற்றுலாப் பயணிகளும் தோழர்களுடன் இணைந்து பெரியார் பிறந்த நாளை கொண்டாடினர்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP
Posted : October 03, 2025

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran